
# கிறிஸ்துவின் வசனம்

# Word of Christ





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

கிறிஸ்துவின் வசன

வாசகர் அனைவருக்கும்

எங்களது

# 1997 - ம் ஆண்டு

# புத்தாண்டு வாழ்த்துக்கள்

---

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். எபேசியர் 5 : 16

---

நம்மை உண்டாக்கின தேவனுடைய நாமத்தில் வாழ்த்துக்கள் இவ் வருடம் முழுவதும் நம்மை அற்புதமாக வழி நடத்தி வந்த இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக. தொடர்ந்து இவ்விதழை பெற்றுவருவதற்காக கர்த்தரை நன்றியோடு துதியுங்கள் புத்தாண்டில் புதிய தீர்மானத்தோடு வெற்றி நடை போடுங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் புத்தாண்டில் முன்னூறு வாசகர்களுக்கு இவ்விதழை அனுப்ப தீர்மானித்து உள்ளோம். வட மாநிலங்களில் உள்ள உங்களது நண்பர்களுக்கு இவ்விதழை கொடுத்து. இந்தியாவில் "கிறிஸ்துவின் வசனம்" பரப்ப ஒத்துழைப்பு கொடுங்கள் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

எங்களோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்,

ஆசிரியர்

B. அர்சுனன்

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 டிசம்பர் 1996 கனி 5


## மேலானவைகளை தேடுங்கள்
### Seek, the things above

"பூமியில் உள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் என்றார் பவுல் (கொலோ. 3:2). நாம் செய்யத் தக்க ஞானமுள்ள காரியம் இது தான். ஏனெனில் பூமியும் அதிலுள்ள யாவும் ஒரு நாள் அழிந்து போகும். ஆகையினால் காணப் படுகிறவைகளையல்ல, காணப் படாதவைகளையும் நோக்கி இருக்க வேண்டும். ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

காணப்படாதவைகளை காண்பது எப்படி? விசுவாசம் என்கிற கண்ணினால் தேவனுடைய சிருஷ்டிப்புக்களிலே மனிதன் மாத்திரம்தான் காணப்படாதவைகளை விசுவாசத்தின் கண்ணால் காணக் கூடிய திறன் பெற்றிருக்கிறான். அப்படி இல்லை என்றால், மனிதனுக்கும், மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்? கிறிஸ்து தன் சீஷர்களைப் பார்த்து "நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" (யோவான். 15 : 19).

கிறிஸ்துவின் உண்மை சீஷர்கள், உலகத்திற்கு சொந்தமானவர்கள் அல்ல. அவர்கள் கால்கள் தான் இப்பூமியில் சுற்றும். ஆனால் மேலானவைகளை நாடுவார்கள். அவர்கள் பொக்கிஷங்களை எல்லாம் பரலோகத்தில் சேர்க்கிறார்கள் அவர்கள் இம்பூமியில் ஜீவிப்பது உலகத்தானைப் போலல்ல. உலகத்தில் இருக்கிறார்களே தவிர, உலகத்திற்கு சொந்தமானவர்கள் அல்ல. அப்படியென்றால், இங்குள்ள நாளெல்லாம் எந்த சந்தோஷமுமில்லாமல் இருப்பார்கள் என்று அர்த்தமா? இல்லை. உலகம் காணாத முழுமையான சமாதானம். சந்தோஷத்தை, அதாவது பரிபூரண ஜீவனை இங்கு அனுபவிப்பவர்கள். மறுமையிலும் நித்திய சந்தோஷத்துக்கான நல்நம்பிக்கை உண்டு. இதுவே கிறிஸ்தவ மார்க்கத்தின் தனிச் சிறப்பு.

ஒரு நாள் மண்ணினாலான இந்த சரீரம், மண்ணுக்கு இரையாகும். இந்த உலகமும் நெருப்பினால் அழிக்கப்படும். ஆனால் ஆத்துமா அழியாமல் என்றென்றும் இருக்கும். அது

தான் விலையேற்றப்பட்ட பொக்கிஷம். அதை நமக்கு உணர்த்தத் தான் இயேசுவும், ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் என்றார் (மத். 16:26).

''கிறிஸ்து நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மை தாமே ஒப்புக்கொடுத்தார்'' (கலா,1:4).

நித்திய பிதாவின் ஒரே பேரான குமாரன், நாம் ஐசுவரியவானாகும்படி, தான் உன்னதமான பரலோகத்தை விட்டு பாவம் நிறைந்த இவ்வுலகிற்கு மனிதனாக வந்து, ஏழைக் கோலம் பூண்டார். ''அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே (2 கொரி. 8:9). பரலோகத்தை விட்டு இப்பூமிக்கு வந்தது நம்பாவங்களுக்காக தன்னையே பலியாக ஒப்புக் கொடுக்க மாத்திரம் அல்ல. ஆவிக்குரிய தரித்திரத்திலிருந்து நம்மை தூக்கி விடவும் பிதாவை நமக்கு காண்பிக்கவும் வந்தார் (யோவா. 14:8-11).

கிறிஸ்துவை நாம் காண முடியுமா? விசுவாசக் கண்ணால் காண முடியும். கிறிஸ்து சீஷர்களைப் பார்த்து, ''இன்னும் கொஞ்சகாலத்தில் உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்'' என்றார் (யோவா. 14:19) சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னமே சீஷர்களோடு 3 1/2 ஆண்டு காலம் இப்புவியில் தங்கி ஊழியம் செய்த அதே கிறிஸ்து இன்றும் விசுவாசிகளின் இருதயத்தில் நிறைந்திருக்கிறார், ''வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம் நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதவிக்கக் கூடாத பிரதான ஆசிரியர் நமக்கிராமல், எல்ல விதத்திலும் நம்மைபோல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார், ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக் கடவோம்'' (எபி. 4:14-16).

கிறிஸ்து இப்பொழுது எங்கே இருக்கிறார்? அவர் உன்னதத்தில் இருக்கிறார். தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். மீட்கப்பட்டவர்களுடன் ஜீவிக்கிறார் (கலா: 2:20)

நாம் அவருக்குள் ஜீவிக்கிறோம். அவர் நம்மில் ஜீவிக்கிறார், அது எப்படி சாத்தியமாகும்? அவிசுவாசி இதைக் கேட்டு சிரித்து, முடியாது என்கிறான். பஞ்சை தண்ணீரில் போட்டுவிட்டு தண்ணீரில் பஞ்சு இருக்கிறதா, பஞ்சில் தண்ணீர் இருக்கிறதா என்று கேட்டால் ஆம் இரண்டும் சரிதான். பவுல் கூறினார், ''உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே, தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஆகையினால் அவர் வல்லமை, அறிவு, சந்தோஷம் இவற்றை நம்மோடு பகிர்ந்து கொள்வார், எப்போது? நாம் அவருடையவர்களாகும் போது!

கிறிஸ்து நம்முடைய ஜீவனாக இருக்கும்பொழு கொலோ (3:4) ஒவ்வொரு கிறிஸ்துவனும், புதிய நிலையில் புது குறிக்கோளுடன்: புது நம்பிக்கையில், புது சக்தியோடு புது தெம்போடு வாழ முடியும், அது தான் பரிபூரண ஜீவன்.

கிறிஸ்து ஒருவரே ஆத்துமாவிற்கு ஒரே நம்பிக்கை. உலகம் முழுவதும் சோர்ந்து கலங்கிப்போன ஆத்துமாக்கள் நிம்மதி தேடி அலைகிறதை நாம் அன்றாடம் பார்க்கிறோம். கொடுமைபடுத்துவோரிடத்திலிருந்து சுதந்திரம் வேணும் என்கிறார்கள்.

கிறிஸ்து கரங்களை நீட்டி, ''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறார், (மத்.11:28).

காணமுடியாத கிறிஸ்துவை விசுவாசக் கண்ணால் பார்க்க முடியாதவர்கள், அவர் சத்தத்தைக் கேட்பது எப்படி? நம்மை நாமே வழிநடத்த முடியாது. கிறிஸ்துதான் நம்மை வழி நடத்த வேண்டும்.

எரேமியா, ''கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்என்றார்(எரே.10:23).பரிபூரணஜீவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அவர் நம்மை நடத்த வேண்டும் ஆம்! தம்முடைய வசனத்தின் மூலம் நம்மை வழி நடத்துகிறார், யார் வேதாகமத்தை வழிகாட்டி அல்ல என்று நிராகரிக்கிறானோ அவன் திசை காட்டும் கருவிஇல்லாமல் கப்பலில் செல்லுவதற்கு ஒப்பாவான். தேவனுடைய வார்த்தை பூமியிலிருந்து உண்டானதல்ல. அதுவே கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும், அந்த வார்த்தை அழியாதது,நித்தியமானது வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தை ஒழிந்து போவதில்லை என்றார். தேவன், நாம் வேண்டிக்கொள்கிறதற்கும். கேட்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய-வல்லவராயிருக்கிறார். ஆகவே மேலானவைகளையே தேடுங்கள்.

பி.ஆர். சாமி பெங்களூர்

# வாழ்த்து Salute

இவ்வுலகில் ஜீவிக்கிற நாம் ஒருவரையொருவர் வாழ்த்துவதில் முந்திக்கொள்ள வேண்டும். நல் மனச்சாட்சியோடும், சுத்தஇருதயத்தோடும், உபத்திரவத்திலும், துக்கத்திலும், பரிசுத்தமுத்தத்தோடும் வாழ்த்த வேண்டும். இப்படிப்பட்ட வாழ்த்துக்களை பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கலாம்.

ஆதிமுற்பிதாக்களாகிய ரெபெக்காளின் குடும்பத்தார் ஆதி24:60ல் ரெபெக்காளை வாழ்த்தி: எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய் பெருகுவாயாக; என்று சொல்லி வாழ்த்தினார்கள். இவ்வாழ்த்துதல் ரெபெக்காளுக்கு எவ்வளவு உற்சாகத்தைக் கொடுத்திருக்கும். நாம் நம் குடும்பத்தார்களை இவ்விதமாக வாழ்த்துகிறோமா? யோசித்துப் பாருங்கள். நமது ஆண்டவராகிய இயேசுவும் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகளைப் பார்த்து மத் 28:9 ல் அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். இந்த ஸ்திரீகளுக்கு உள்ளம் எவ்வளவு தூரம் பூரித்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். அவர்கள் பயத்தோடும், மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டு சீக்கிரமாய் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். ஆச்சமயத்தில் இயேசு அவர்களைப் பார்த்து வாழ்க என்றார்.

ரூத்தினுடைய சம்பவத்தில் அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். ரூத் 4:16, 17 ல் நகோமி அந்த பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள். அயல் வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி அதற்கு ஓபேத் என்று பெயரிட்டார்கள். இது அயலகத்தாருடைய அருமையான வாழ்த்தல்லவா! இவர்கள் அவர்களோடு கொண்டுள்ள அன்பை இது நமக்கு பிரதிபலித்துக் காட்டுகிறதல்லவா! நாமும் இவர்களைப் போல நமது அயலகத்தாரை வாழ்த்த வேண்டும். இயேசுவும் மத் 5:47,48ல் உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா! ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.

தாவீது பத்து வாலிபரை அழைத்து நீங்கள் கர்மேலுக்குப்போய் நாபாலிடத்தில் சென்று என் பெயரை சொல்லி அவன் சுகசெய்தியை விசாரித்து, அவனை நோக்கி: நீர் வாழ்க உமக்குச் சமாதானமும்

உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும் உமக்கு உண்டான எல்லா வற்றிற்கும் சமாதானம் உண்டாவதாக என்று 1சாமு 25:6ல் அவனை வாழ்த்தினார்கள். சத்துருவாகிய நாபாலோ தாவீதின் வார்த்தைகளை அசட்டை செய்தான். இந்த தாவீது சத்துருவையும் வாழ்த்துவதைப் பார்க்கிறோம். நமது ஆண்டவரும் மத் 5:44ல் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச்சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்றார். மேலும் பவுலும் ரோம சபையாருக்கு எழுதும் போது ரோம 12:14ல் உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள் என்று எழுதுவதை வாசிக்கின்றோம். நாமும் இவ்விதமாகவே ஆசீர்வதிப்போம்.

உபத்திரவத்திலும் வாழ்த்தின தானியேல் தீர்க்கதரிசியை நாம் மறக்கமுடியாது தானி 6:20,21ல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்ட தானியேலைப் பார்த்து, ராஜா மறுநாள் கெபியின் கிட்ட வந்தபோது துயரசத்தமாய் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன், உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று கேட்டான். அப்பொழுது தானியேல், ராஜவே, நீர் என்றும் வாழ்க என்றான். உபத்திரவத்தின் குகையில் ஒப்புக் கொடுத்தும் ராஜா மீது கோபமில்லாமலும், கலங்காமலும், பயப்படாமலும் வாழ்த்துவதைப் பாருங்கள். நாம் சிறு காரியத்திற்குக் கூட கோபித்து, பார்த்தும், பார்க்காததுபோல் திரும்பிப் போய்விடுகிறோம். என் அன்பு சகோதரரே! வேத வசனம் எங்கே? நாம்எங்கே? சிந்தியுங்கள்.

துக்கத்திலும் வாழ்த்தின நெகேமியாவையும் மறக்கமுடியாது. நெகே 2:3ல் ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும் அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கும் போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றான். தன் ஸ்தலத்தைக் குறித்த பக்தி வைராக்கியம், கரிசனையை நெகேமியாவிடம் காண்கிறோம். இதே போல் நாமும் நமது சபையைக்குறித்தும் சபையின் காரியங்களைக் குறித்தும் ஆவிக்கேற்ற துக்கமுடையவர்களாய் இருக்கிறோமா? இப்படி நாம் துக்கத்தோடு இருக்கும் போதும் நெகேமியாவைப் போல் மற்றவர்களையும் வாழ்த்த வேண்டும்.

அன்பினால் நாம் ஒருவரையொருவர் வாழ்த்த வேண்டும். லூக் 1:41 ல் மரியாள் எலிசபெத்தை வாழ்த்துவதை வாசிக்கின்றோம். தேவதூதனுங்கூட மரியாளைப் பார்த்து லூக் 1:28ல் கிருபை பெற்றவளே வாழ்க என்றான். பவுலும் நிருபங்கள் தோறும் II தெச 3:17ல் உங்களை வாழ்த்துகிறேன் என்று வாழ்த்தி இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன் என்றான். நாமும் ஒருவரையொருவர் வாழ்த்துவது மிக மிக முக்கியமாக இருக்கிறது. இதுவரை நீங்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தாமலிருந்தால் இனிவருகிற நாட்களிலாவது வாழ்த்தி தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
ரோம 16:16. கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்.

★ சபை செய்திகள்

1. வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த சகோ. சடையாண்டி, சுப்புலட்சுமி தம்பதியினருக்கு 9-11-96 அன்று கர்த்தர் ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்தார்.
2. பாண்டிச்சேரி கிறிஸ்துவின் சபை ஊழியர் சகோ. செங்கோல் ராயன் செல்வி தம்பதியினருக்கு 10-11-96 அன்று கர்த்தர் ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்தார்.
3. பாண்டிச்சேரி கிறிஸ்துவின் சபையில் 28-11-96ல் மேரிஜோஸ்பின் தெரசா கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்
4. வத்தலக்குண்டு கிறிஸ்துவின்சபையில் மாதந்தோறும் மூன்ருவது வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் சகோதரிகளுக்கான கூட்டம் இம்மாதமும் சிறப்புடன் நடைபெற்றது.

★ புது வருட காலண்டர் தேவைக்கு கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்க.

S. DAVIDMARTIN,
17, SIDDALU ST.,
CHENNAI - 600 112.

ஒரு காலாண்டர் விலைரூ 13/-
தபால் செலவு தனி

★ அக்டோபர் மாத வேதஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

1. மேரி எலிசபெத் கலைவாணி — வத்தலக்குண்டு
2. மேரியம்மாள் — ,,
3. டேனியல் தமிழ்வாணன் — மேல்விசாரம்
4. கனகவல்லி — M. இராமச்சந்திராபுரம் (காமராஜர் Dt)

★ நவம்பர் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. டேனியல் தமிழ்வாணன் - மேல்விசாரம்
2. சர்லோ - பாண்டிச்சேரி
3. மேரி எலிசபெத் கலைவாணி - வத்தலக்குண்டு
4. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
5. ரூத் - G. கல்லுப்பட்டி
6. கனகவல்லி - M. இராமச்சந்திராபுரம்
7. ஸ்டெல்லா ஞானம்மாள் - காளையார்குறிச்சி

★ நவம்பர் மாத இதழின் விடைகள்

1. தாவீது 1 சாமு 26:12
2. நரகத்திலே சங் 9:17
3. சூரியனைப் மத் 13:43
4. பலவீனருடைய ரோம 15:1
5. உயிர்ப்பிக்கப்படுவார்கள் 1 கொரி 15:22
6. உண்மையுள்ள
7. சத்துருவாயிருந்தான்
8. ஆத்துமாவுக்கு
9. இயேசு
10. லாபான், யாக்கோபு

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து எழுதி இம்மாதம் 25ந் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்கவும்.

1. என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்றது யார்?
2. நீ எலும்பும், என் மாம்சமுமானவன் என்று யார் யாரைப்பார்த்து சொன்னான்?
3. நம்முடைய அற்பான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துபவர் யார்?
4. உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும் உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடே கூட இளைப்பாறுதலையும் பிரதிப்பலனாகக் கொடுப்பது யாருக்கு நீதியாயிருக்கிறது?
5. தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து எதிலே நடக்கிறான்?
6. பாதாளமானது யாரைப் பட்சிக்கும்?
7. ஞானியின் இருதயம் எந்தக் கையில் இருக்கும்?
8. ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ் செய்த சீஷன் யார்?

9. இரக்கஞ் செய்யாதவனுக்கு எப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்?

10. பேசாத, மிருகம் மனுஷர் பேச்சைப் பேசி எந்த தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது?

# பெண்கள் பகுதி

## பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது
## Fear not, For thy prayer is heard.

அன்பான சகோதரிகளே! எவ்வளவு ஆறுதலான பதில் இது. சகோதரிகளான நமக்கு எத்தனையோ பொறுப்புகள் உண்டு. பொறுப்புகள் மத்தியில் எத்தனையோ பிரச்சனைகள், ஏமாற்றங்கள், வேதனைகள், பரிகாசங்கள், இழப்புகள் போன்ற அநேக உபத்திரவங்களை சந்திக்க வேண்டியுள்ளது. இன்னும் சொல்லப் போனால், கர்த்தருக்கு பிரியமாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பத்தின் பாதையில் நடந்து தான் ஆக வேண்டும். ஆனாலும், சகோதரிகளே! நாம் பயப்பட வேண்டியதில்லை நம் வேண்டுதல்கள், நம் ஜெபங்கள் கேட்கப்படும்.

பரிசுத்த வேதாகமத்தில் சகரியா, எலிசபெத் என்ற தம்பதியரைப் பற்றி லூக் 1ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். இவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும், நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள், அப்படியானால் தேவனுடையசகல ஆசீர்வாதங்களோடு குறைவற்றவர்களாய் இருந்திருக்க வேண்டுமே! இல்லை! எலிசபெத்தோ மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லா திருந்தது. இருவரும் வயது சென்றவர்களாயுமிருந்தார்கள். எவ்வளவு ஏக்கத்துடன் அந்த எலிசபெத் இருந்திருக்க வேண்டும். இருந்த போதிலும் சகரியாவினுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது.

இன்றைய நாட்களிலும் அநேகர் பற்பல பிரச்சனைகளோடும் வேதனைகளோடும், மற்றும் எனக்கு வேலை கிடைக்கவில்லையே, திருமணமாகவில்லையே, குழந்தையில்லையே, வீட்டில் சமாதானமில்லையே, அருமையானவர்களை இழந்துவிட்டனே, நான் கர்த்தருடைய கற்பனைகளின்படி தானே நடக்கின்றேன், ஏன் இன்னும் என் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லை என அங்கலாயித்துக் கொண்டிருப்பவர்கள் அநேகர். கலங்காதீர்கள்! கிறிஸ்தவ வாழ்க்கையென்பது ஒரு சொகுசான, சோதனையற்ற வாழ்க்கையல்ல.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று (யோவா 16:33ல்) கூறிய நாதாண்டவராகிய இயேசுவை நோக்கிப் பார்ப்போம்.

மலடியாயிருந்த எலிசபெத் ஒரு குமாரனைப் பெற்றாள், காத்திருந்து பெற்ற அவளுடைய குமாரனாகிய யோவானின் பிறப்பினிமித்தம் அவளுடைய அயலகத்தாரும், பந்து ஜனங்களும் அவளுடனே கூடச் சந்தோஷப்பட்டார்கள் லூக் 1:13, 58 தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார் லூ 18:7,8.

சகோதரிகளே! நாம் பயப்படாதிருப்போம். நம் வேண்டுதல் கேட்கப்படும். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிப்போம். நம் ஜெபத்திற்கு நிச்சயம் பதில் வரும். பொறுமையுடன் ஜெபத்தில் தரித்திருப்போம், நம் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். நாமும் இந்த எலிசபெத்தைப் போல சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருப்போம். அப்பொழுது நம் வேண்டுதல் கேட்கப்படும். கர்த்தர் நமக்குச் செய்யப்போகிற ஆசீர்வாதங்களைக் கண்டு நாம் மட்டுமல்ல நம்மோடு கூட அநேகர் மகிழ்ச்சியடைவார்கள்.

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை. ஜெப வீராங்கனைகளாக மாறுவோம்! ஜெயம் பெறுவோம்!!


குளோரி அர்ச்சுனன்

வத்தலக்குண்டு

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No. 84661-92
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**

WORD OF CHRIST
Post Office Box No. 5.
**Batlagundu-624 202.**
S. India

Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti RoadBTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.